# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATION IN BACHELOR OF COMMERCE (EXTERNAL) 2008 / 2009 - HELD IN AUGUST 2009

## COM 21 - ADVANCED FINANCIAL ACCOUNTING

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.** **நேரம்: 03 மணித்தியாலங்கள்**

---

01. மெலன் நிறுவனத்தினதும் அதன் உப கம்பனி மெங்கோ நிறுவனத்தினதும் 31 டிசம்பர் 2008 இல் உள்ளவாறான நிதி நிலைமையினைக் காட்டும் கூற்று பின்வருமாறு.

31 டிசம்பர் 2008 இல் உள்ளவாறான நிதி நிலைமையினைக் காட்டும் கூற்று

| | மெலன் நிறுவனம் (ரூபா.'000.) | மெங்கோ நிறுவனம் (ரூபா.'000.) |
|---|---|---|
| **நடைமுறைஅல்லா சொத்துக்கள்** | | |
| காணி கட்டிடம் | 2,250 | 1,720 |
| இயந்திரமும் உபகரணமும் | 1,025 | 485 |
| முதலீடு | 2,200 | 0000 |
| | **5,475** | **2,205** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| இருப்பு | 900 | 675 |
| வியாபாரப் பெறுகைகள் | 450 | 510 |
| காசு | 150 | 65 |
| **மொத்த சொத்துக்கள்** | **6,975** | **3,455** |
| **பங்குதாரர் உரிமை** | | |
| ஒவ்வொன்றும் ரூபா 10 வான பங்குமுதல் | 2,500 | 1,000 |
| பகிரப்படாத இலாபம் | 1,860 | 1,365 |
| | **4,360** | **2,365** |
| **நடைமுறைப் பொறுப்பு** | | |
| வியாபாரக் கொடுப்பனவு | 950 | 800 |
| அட்டுறு செலவுகள் | 775 | 290 |
| வருமான வரி | 890 | 0000 |
| **மொத்த பொறுப்புக்களும் பங்குதாரர் உரிமையும்** | **6,975** | **3,455** |

**மேலதிக தகவல்கள்:**

அ. மெலன் நிறுவனம் 01 ஜனவரி 2005 இல் மெங்கோ நிறுவனத்தின் 70,000 சாதாரண பங்குகளை ரூபா. 1,600,000 வுக்கு கொள்வனவு செய்தது. அத்திகதியில் மெங்கோ நிறுவனத்தின் பகிரப்படாத இலாபம் ரூபா 100,000 ஆகும்.

ஆ. மெங்கோ நிறுவனத்தின் பங்குகளை மெலன் நிறுவனம் கொள்வனவு செய்தபோது மெங்கோ நிறுவனத்தின் தேறிய சொத்துக்களின் புத்தகப் பெறுமதியும் சந்தைப் பெறுமதியும் சமமாகக் காணப்பட்டன. இருந்தபோதிலும் காணி கட்டிடத்தின் சந்தைப் பெறுமதி புத்தகப பெறுமதியை விட கீழ்வரும் தொகையால் அதிகமாகக் காணப்பட்டது.

| | (ரூபா.'000.) |
|---|---|
| காணி | 350,000 |
| கட்டிடம் 01 ஜனவரி 1990 இல் கொள்வனவு செய்யப்பட்டது | 100,000 |

இ. 01 ஜனவரி 2005 இல் உள்ள கட்டிடங்களின் எஞ்சிய வாழ்க்கைக் காலம் 40 வருடங்கெளென தீர்மான்க்கப்பட்டுள்ளது.

ஈ. மெங்கோ நிறுவனம் மெலன் நிறுவனத்தால் பயன்படுத்தப்படும் உதிரிப்பாகமொன்றை உற்பத்தி செய்கிறது. இது மெங்கோ நிறுவனத்தால் கிரயத்துடன் 33 1/3% சேர்த்து அனுப்பப்படுகிறது. வருட இறுதியில் இவ்வுதிரிப்பாகங்களில் ரூபா 150,000 பெறுமதியானவை மெலன் நிறுவனத்தின் இருப்புக்களில் காணப்படுகின்றன.

உ. 31 டிசம்பர் 2008 இல் நன்மதிப்பில் எவ்வித குறைவும் ஏற்படவில்லை.

வேண்டபடுவது:

31 டிசம்பர் 2008 இல் உள்ளபடியான திரட்டிய நிதி நிலைமையினைக் காட்டும் கூற்றினைத் தயாரிக்குக.

(25 புள்ளிகள்)

02. கீழ் வருவது லெப்ற் நிறுவனத்தினதும் றைற் நிறுவனத்தினதும் 30 ஜுன் 2008 இல் நிதி நிலமையினைக் காட்டும் கூற்றாகும்.

30 ஜுன் 2008 இல் நிதி நிலைமையினைக் காட்டும் கூற்று

| | லெப்ற் நிறுவனம் (ரூபா.'000.) | றைற் நிறுவனம் (ரூபா.'000.) |
|---|---|---|
| **நடைமுறை அல்லா சொத்துக்கள்** | | |
| காணி கட்டிடம் | 40,000 | 15,000 |
| இயந்திரமும் உபகரணமும் | 180,000 | 62,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| இருப்பு | 18,200 | 9,800 |
| வியாபாரப் பெறுகைகள் | 15,900 | 11,200 |
| காசு | 4,500 | 1,550 |
| **மொத்த சொத்துக்கள்** | **258,600** | **99,550** |
| **பொறுப்புக்களும் உரிமையும்** | | |
| பங்குமுதல் | 150,000 | 70,500 |
| வருமான ஒதக்கம் | 41,400 | 2,500 |
| பகிரப்படாத இலாபம் | 3,710 | 1,000 |
| | **195,110** | **74,000** |
| 16% தொகுதிக்கடன்கள் | 34,000 | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| வியாபாரப் கொடுப்பனவு | 14,490 | 18,000 |
| அட்டுறு செலவுகள் | 15,000 | 7,550 |
| **மொத்த பொறுப்புக்களும் உரிமையும்** | **258,600** | **99,550** |

இரண்டு நிறுவனங்களும் ஒன்றிணைந்து ஒரு புதிய கம்பனியான சென்றர் நிறுவனத்தினை உருவாக்கத் தீர்மானித்துள்ளது. இப்புதிய கம்பனி இரு நிறுவனத்தினதும் சொத்துக்கள் பொறுப்புக்களையும் எடுத்துக்கொள்கிறது. சென்றர் நிறுவனத்தின் அனுமதித்த மூலதனம் ஒவ்வொன்றும் ரூபா. 10 ஆன 0.1 மில்லியனைக்கொண்ட ரூபா. 10 மில்லியன் ஆகும். லெப்ற் நிறுவனத்தினுடைய சொத்துக்களில் காணி கட்டிடம் தவிர்ந்த ஏனையவை எல்லாம் 10% குறைத்து மதிப்பிடப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது. காணி கட்டிடம் புத்தகப் பெறுமதியில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இரண்டு கம்பனிகளும் அவர்களது வியாபாரத்தின் தேறிய பெறுமதிகளில் 12% ஐ நன்மதிப்பாக பெற்றக்கொள்வர். முழுமையான கொள்வனவுப் பெறுமதியும் சென்டர் நிறுவனத்தின் முழுமையாக செலுத்தப்பட்ட பங்குகளாக வழங்கப்படும். லெப்ற் நிறுவனத்தின் தொகுதிக்கடன் காரர்களுக்கு அவர்களது தொகைக்குச் சமமான தொகுதிக்கடன்கள் சென்டர் நிறுவனத்தினால் வழங்கப்படும்.

**வேண்டப்படுவது:**

லெப்ற் நிறுவனத்தினதும் றைற் நிறுவனத்தினதும் புத்தகங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைக் காட்டுவதோடு சென்றர் நிறுவனத்தின் ஆரம்ப நிதி நிலைமையினைக் காட்டக்கூடிய கூற்றினையும் தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

03. கொன்சப் என்ற் கம்பனி அதனது தலைமை அலுவலகத்தினை கொழும்பிலும் கிளையினை கண்டியிலும் கொண்டுள்ளது. கிளைக்கு பொருட்கள் 33 1/3% கிரயத்துடன் சேர்த்து அனுப்பப்படுகிறது. 31 மார்ச் 2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கிளை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | ரூபா. |
|---|---|
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் (பட்டியல் விலை) | 480,000 |
| 01.04.2007 இல் கிளையில் இருப்பு (பட்டியல் விலை) | 24,000 |
| காசு விற்பனை | 180,000 |
| வாடிக்கையாளர்கள் கிளைக்கு திருப்பிய பொருட்கள் | 6,000 |
| கிளைச் செலவுகள் (காசாக செலுத்தப்பட்டது) | 53,500 |
| 01.04.2007 இல் கிளை கடன் பட்டோர் மீதி | 30,000 |
| அனுமதிக்கப்பட்ட கழிவு | 1,000 |
| அறவிட முடியாக்கடன்கள் | 1,500 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | 270,000 |
| கடன்பட்டோர் திருப்பிய காசோலை மறுக்கப்பட்டது | 5,000 |
| 31.03.2008 இல் கிளையில் இருப்பு (பட்டியல் விலை) | 48,000 |
| 31.03.2008 இல் கிளை கடன் பட்டோர் மீதி | 36,500 |

தலைமை அலுவலகத்தின் ஏட்டில் இருப்பு கடன் பட்டோர் முறையின் கீழ், கீழ்வரும் பேரேட்டுக் கணக்குகளை தயாரிக்குக.

(அ.) கண்டி கிளை இருப்புக்கணக்கு

(ஆ) கண்டி கிளை கடன்பட்டோர் கணக்கு

(இ.) கண்டி கிளை செம்மையாக்கல் கணக்கு

கிளையில் ஏதாவது இருப்பு குறைவு ஏற்பட்டால் அதனையும் கணிக்குக.

(20 புள்ளிகள்)

04. கீழ்வருவது 31.3.2008 இல் X நிறுவனத்தின் ஐந்தொகையாகும்.

**31.3.2008 இல் X நிறுவனத்தின் ஐந்தொகை**

| பொறுப்பக்கள் | ரூபா. | சொத்துக்கள் | ரூபா. |
|---|---|---|---|
| **பங்குமுதல்** | | **நிலையான சொத்தக்கள்** | |
| 14%, 40,000 முழுமையாக | | காணி | 40,000 |
| செலுத்தப்பட்ட ஒவ். ரூபா. 100 வான | | கட்டிடம் | 160,000 |
| முன்னுரிமைப் பங்குகள் | 400,000 | இயந்திரமும் உபகரணமும் | 540,000 |
| ஓவ். 100 ரூபாவான 8000 | 480,000 | வியாபாரக் குறி | 40,000 |
| சூாதாரண பங்ககள் 60 ரூபா. | 480,000 | முதலீடு | NIL |
| செலுத்தப்பட்டது | | | |
| ஒதுக்கங்களும் மிகையும் | NIL | | |
| **அடமானக்கடன்** | | **நடைமுறைச் சொத்து, முற்பணங்கள்** | |
| 14% தொகுதிக்கடன்கள் | 230,000 | **நடைமறை சொத்து** | |
| (எல்லாச் சொத்துக்களிலும் மாறும் | | இருப்ப கிரயத்தில் | 100,000 |
| வீதம்) | | வியாபாரக் கடன்பட்டோர் | 230,000 |
| மேற்கூறப்பட்ட. தொகுதிக் கடன் | | வங்கியிலுள்ளகாசு | 60,000 |
| மீதான வட்டி | 32,200 | **முற்பணங்கள்** | NIL |
| (மேற்கூறப்பட்து போல் மாறும் வீதம் | | சில்லறை செலவுகள் | NIL |
| காணி கட்டிடத்தின் மீது அடமான | | இலாப நட்டக்கணக்கு | 240,000 |
| முள்ள கடன்கள் | 150,000 | | |
| அடமானமற்ற கடன் | NIL | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 117,800 | | |
| | **1,410,000** | | **1,410,000** |

31.03.2008 இல் கம்பனி தற்காலிக கலைப்புக்கு உள்ளானது. 14% முன்னுரிமைப் பங்குகள்மீது ஒரு வருட பங்கிலாபம் நிலுவையாக உள்ளது. வியாபாரக் கடன்கொடுத்தோரில் ரூபா. 30,000 முன்னுரிமைக் கடன்காரர்களாகும்.

கீழ்வரும் பெறுமதிகளில் சொத்துக்கள் தேறின.

காணி ரூபா. 80,000; கட்டிடம் ரூபா. 2,00,000; இயந்திரமும் உபகரணமும் ரூபா. 5,00,000; வியாபாரக் குறி ரூபா. 50,000; இருப்பு ரூபா. 1,60,000; வியாபாரக் கடன்பட்டோர் ரூபா. 2,00,000.

கலைப்புச் செலவின் பெறுமதி ரூபா. 29,434. கலைப்பாளர் வங்கியிலுள்ள காசு தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் தேறிய பெறுமதியில் 2% மும் முன்னுரிமைக் கடன்காரர்கள் தவிர்ந்த எனைய அடமானமற்ற கடன்காரர்களின் பெறுமதியில் 2% மும் தரகுக்கு உரித்துடையவராவார். 30 ஜூன் 2008 இல் எல்லா செலுத்துகைகளும் பெறப்பட்டன. செலுத்துகை நேரத்தில் அடமானக்கடன் மீதான வட்டி தவிர்க்கப்பட்டது.

**கலைப்பாளர் இறுதிக் கணக்குகூற்றினைத் தயாரிக்குக.**

(20 பள்ளிகள்)

05. கீழ்வருவது 31.03.2008 இல் றொக்கி நிறுவனத்தின் ஐந்தொகையாகும்:

| **பொறுப்புக்கள்** | **ரூபா. இலட்சத்தில்** |
|---|---|
| ஒவ்வொன்றும் ரூபா. 10 ஆன முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்ககள் | 500 |
| மூலதன ஒதுக்கம் | 6 |
| 12% தொகுதிக் கடன்கள் | 400 |
| நிலுவையான தொகுதிக்கடன் வட்டி | 48 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 165 |
| நிலுவையான இயக்குனர்களின் சம்பளம் | 10 |
| நிலுவையான ஏனைய செலவுகள் | 11 |
| ஒதுக்கங்கள் | 33 |
| | **1,173** |
| **சொத்துக்கள்** | |
| நன்மதிப்பு | 15 |
| காணி கட்டிடம் | 184 |
| இயந்திரமும் உபகரணமும் | 286 |
| தளபாடம் பொருத்துகை | 41 |
| இருப்பு | 142 |
| கடன்பட்டோர் | 80 |
| வங்கியிலுள்ள காசு | 27 |
| தொகுதிக்கடன் வளங்கல் கழிவு | 8 |
| இலாப நட்டக் கணக்கு | 390 |
| | **1,173** |

கீழ்வரும் உள்ளக மறுகட்டமைப்புத் திட்டம் வரையப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்னர் அத்திட்டம் எல்லா குழுக்களாலும் அமுல்படுத்தப்பட்டன.

(அ) எல்லா சாதாரண பங்குகளும் ஒவ்வொன்றும் ரூபா. 2..50 படியான சமமான எண்ணிக்கையான முழுமையாக செலுத்தப்பாட்ட சாதாரண பங்குகளாக மாற்றப்பட்டன.

(ஆ) இயக்குனர்கள் நிலுவையாக உள்ள அவர்களது சம்பளத்தை விட்டுக்கொடுக்க தீர்மானித்தள்ளனர்.

(இ.) தொகுதிக்கடன்காரர்களும் அவர்களது நிலுவையாக உள்ள வட்டியையும் விட்டுக்கொடுக்கத் தீர்மானித்தள்ளனர். இதற்காக அவர்களது 12% தொகுதிக்கடன்கள் 13% தொகுதிக்கடன்களாக மாற்றப்படும்.

(ஈ) தற்போதைய சாதாரண பங்குதாரர்கள் ரூபா. 2.50 படியான பங்குகளை ரூபா. 125 இலட்சத்திற்கு காசு கொடுத்து கொள்வனவு செய்ய இணங்கியுள்ளனர்.

(உ) வியாபாரக் கடன்கொடுத்தோர்கள் அவர்களுக்கு நிலுவையாக உள்ள பெறுமதிக்கு முழுமையாக செலுத்தப்பட்ட ரூபா. 2.50 படியான பங்குகளை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது அவர்களுக்கு நிலுவையாக உள்ள பெறுமதியில் 80% ற்கு சமமான தொகையை காசாக பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கடன்கொடுத்தோரில் 65 இலட்சம் பெறுமதியுடையவர்கள் சாதாரண பங்குகளை ஏற்றுக்கொண்டதோடு ரூபா. 100,000 பெறுமதியுடையோர் 80 இலட்சத்தை முழுமையான பணமாகப் பெற்றுக்கொண்டது.

(ஊ) சொத்துக்கள் பின்வருமாறு தேறின:

| | ரூபா. இலட்சங்களில் |
|---|---|
| காணி கட்டிடம் | 230 |
| இயந்திரமும் உபகரணமும் | 220 |
| இருப்பு | 120 |
| கடன்பட்டோர்கள் | 76 |

மேற்கூறப்பட்ட எல்லா நடவடிக்கைகளுக்குமான நாட்குறிப்புப் பதிவுகளை காட்டுவதோடு மீள்கட்டமைப்பின் பின்னரான கம்பனியின் ஐந்தொகையையும் தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

***